# திருவண்ணாமலை விற்பனைக்குழு செயலாளர் அவர்களின் செயல் முறை ஆணைகள் முன்னிலை திரு.இரா.தர்மராஜ் பி.ஏ.,

ந.க.எண்:அ/1118/2021 நாள் :01.10.2021

பொருள் : பணிக்குழு – திருவண்ணாமலை விற்பனைக்குழு – இளநிலை உதவியாளர் திரு.கே.தேவா – இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை : 1) அரசாணை எண்:978 வேளாண்மை (AM–111)துறை நாள் :23.05.1985
2 செயலாளர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண்.2336/PSD-I.2020, நாள் : 28.05.2020.
3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்:அ/007/2020 நாள் :24.07.2020.

**உத்தரவு:**

பார்வை(1)ல் காணும் அரசாணையின்படி விற்பனைக்குழுவில் உள்ள இளநிலை உதவியாளர் பதவிகள் தமிழ்நாடு தேர்வாணையத்தின் தெரிவுக்குட்படுத்தப்பட்டும் அவ்வாறு பணியமர்த்தப்படும் இளநிலை உதவியாளர் பதவிக்கு சம்மந்தப்பட்ட விற்பனைக்குழுவின் செயலாளர் பணி நியமன அலுவலர் என்றும் அறிவித்து உத்தவிடப்பட்டுள்ளது.

பார்வை (2)ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு திரு.கே.தேவா தெரிவு செய்யப்பட்டு திருவண்ணாமலை விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (3)ல் காணும் இவ்வலுவலக உத்தரவின்படி தனியர் திருவண்ணாமலை விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டார். அதனடிப்படையில் போளூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இளநிலை உதவியாளராக 29.07.2020 முற்பகல் பணியில் இணைந்துள்ளார்.

தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 29.07.2020 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்தும் தொடர்ச்சியான மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

தனியர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு, வேளாண்மை விற்பனைத்துறை பணியாளர்களுக்கான துறைத் தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி பெற வேண்டும் என நிபந்தனை விதித்து தெரிவிக்கப்படுகிறது.

−2−

இந்த பணிவரன் முறை உத்தரவு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

THE REGULARIZATION IS SUBJECT TO THE OUTCOME OF THE WPS PENDING ON THE FILES OF THE HONABLE HIGH COURT OF MADRAS MADURAI BENCH OF TNE HONABLE HIGH COURT OF MADRAS RELATING TO THE RECRUITMENT TO THE POST INCLUDED IN COMBINED CIVIL SERVICES EXAMINATION FOR THE YEAR 2018 – 2019 AND 2019 – 2020.

இந்த உத்தரவினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை 2வது நகலில் தேதியுடன் கூடிய கையொப்பமிட்டு மீள அனுப்ப அறிவுறுத்தப்படுகிறது.

செயலாளர்,
திருவண்ணாமலை விற்பனைக்குழு,
திருவண்ணாமலை,

பெறுநர்:,
திரு.கே.தேவா
இளநிலை உதவியாளர்
ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்
போளூர் (உரிய வழிமுறையாக)

நகல் சமர்பிக்கப்படுகிறது:
1)ஆணையர் வேளாண் விற்பனை
மற்றும் வேளாண்மை வணிகத்துறை சென்னை−32
2)அ1 பிரிவு
3)இருப்புக்கோப்பு
4)பணிப்பதிவேடு